# சுவடு

## வெளியீடு – 10

பழைய மாணவர் சங்கம்,

யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,

கோப்பாய்.

27.12.2011

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் 2011 /2012
## *நிர்வாக சபை உறுப்பினர் விபரம்*

| | | |
|---|---|---|
| போஷகர் | :- | திரு. நா. சிவநாதன் |
| தலைவர் | :- | திரு. க. இ. இராசசேகரம் |
| உபதலைவர்கள் | :- | திரு. ஐ. சிவலோகநாதன் |
| | | திரு. கி. கிருஸ்ணகுமார் |
| | | திரு. G. T. ஞானசேகரவேல் |
| | | திரு. செ. பரமானந்தன் |
| செயலாளர் | :- | திரு. ந. உமாகாந்தன் |
| உபசெயலாளர் | :- | திரு. க. விநாயகலிங்கம் |
| பொருளாளர் | :- | திரு. வை. சுப்பிரமணியம் |
| நிர்வாக சபை உறுப்பினர்கள் | :- | திரு. B. S. A. அரியரட்ணம் |
| | | திரு. செ. தபேஸ்வரன் |
| | | திருமதி சி. நாகேஸ்வரி |
| | | திருமதி உ. சுரேந்திரகுமார் |
| | | செல்வி ம. கந்தையா |
| | | திரு.வே. சண்முகலிங்கம் |
| | | திரு. பா. திருமாறன் |
| | | திரு. கு. துஸ்யந்தன் |
| | | திரு. பா. திவ்வியராஜ் |
| | | திரு. ப. சேவற்கொடியோன் |
| பத்திராதிபர் | :- | திரு. சி. சிவலிங்கம் |
| கணக்குப் பார்வையாளர் | :- | திரு. க. இராமச்சந்திரன் |

## அமரத்துவ அதிபர்கள்

| | | | |
|---|---|---|---|
| திரு. G. S. செல்லையா | 01.01.1945 | - | 30.04.1951 |
| திரு. T.W. இராசசேகரம் | 01.05.1951 | - | 31.07.1957 |
| திரு. E. C. A. நவரட்ணராசா | 01.09.1957 | - | 27.12.1963 |
| திரு. E. K. சண்முகநாதன் | 28.12.1963 | - | 31.05.1971 |
| திரு. M. கார்த்திகேசன் | 01.06.1971 | - | 31.12.1971 |
| திரு. S. சிவசுப்பிரமணியம் | 01.01.1972 | - | 11.07.1973 |
| திரு. S. செல்வரட்ணம் | 07.10.1980 | - | 27.10.1983 |
| திரு. N. சிவகடாட்சம் | 19.08.1996 | - | 11.10.2005 |
| திரு. S. கந்தசாமி | 01.09.1973 | - | 26.12.1974 |

## சுவடு

| இதழ் | வெளியிடப்பட்டது | ஆசிரியர் |
|---|---|---|
| 1 | 27.12.1997 | திரு. S. K. தங்கவடிவேல் |
| 2 | 27.12.1998 | திரு. ஆ. ஜெயபாலசிங்கம் |
| 3 | 20.02.2002 | திரு. இ. ரகுமார் |
| 4 | 27.12.2004 | திரு. S. K. தங்கவடிவேல் |
| 5 | 27.12.2005 | திரு. S. K. தங்கவடிவேல் |
| 6 | 27.12.2007 | திரு. சி. சிவலிங்கம் |
| 7 | 27.12.2008 | திருமதி உ. சுரேந்திரகுமார் |
| 8 | 27.12.2009 | திரு. சி. சிவலிங்கம் |
| 9 | 27.12.2010 | திரு. சி. சிவலிங்கம் |
| 10. | 27.12.2011 | திரு. சி. சிவலிங்கம் |

# கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

நாட்டிலுள்ள அனைவருக்கும் தரமான கல்வியை வழங்க வேண்டும் என்ற இலக்கு முன்னெடுக்கப்படும் இன்றைய கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வருகின்ற வருடம் எமது கல்லூரி அன்னை நூற்றி அறுபது வருடங்களில் கால்பதிக்கின்றாள். கடந்த காலங்களில் பல சான்றோர் களையும், சிறந்த ஆற்றல்மிக்கவர்களையும், உருவாக்கி பல சாதனை களைப் படைத்து புகழ் பூத்த கல்லூரியாக எமது கல்லூரி மிளிர்கின்றது. **"உண்மைக்கும் நேர்மைக்கும"** என்ற மகுடவாக்கியத்துக்கு ஏற்ப நல்ல ஒழுக்கசீலர்களையும், பண்பாட்டாளர்களையும் சமூகத்திற்கு வழங்கியது எமது கல்லூரி. இந்த உயர்ந்த விழுமியங்களை தொடர்ந்து நாம் பேணுவதற்கு அயராது உழைக்க வேண்டும்.

ஆயிரம் பாடசாலைத்திட்டத்தின் கீழ் எமது கல்லூரி வருகின்றது. புதுவருடத்தில் இருந்து இதற்குரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படும் போது கல்லூரிச் சமூகம் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சிறந்த, நல்ல ஆசிரியர்களை வளமாகக் கொண்டு விளங்கும் கல்லூரி கல்வி மேம்பாட்டிலும், இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கு கின்றது. கல்லூரியின் கடந்த வருடச் செயற்பாடுகள் இவ்வருட பரிசில் நாள் அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று அனைவருக்கும் முக்கியமான பொறுப்புள்ளது. மாணவர்களது வருகையை அதிகரிக்கச் செய்வதுடன் அவர்களது, ஒழுங்கு, ஒழுக்கம், கட்டுப்பாடு அனைத்தையும் பேணுகின்ற முயற்சியில் அனைவரும் ஈடுபட வேண்டும். வருடந்தோறும் கொண்டாடப்படும் அமரத்துவ அதிபர் தினம், மற்றும் சுவடு சஞ்சிகை வெளியீடு இரண்டும் வருடங்கள்தோறும் செய்வது போன்று செய்யப்பெற்றுள்ளது. இப்பணிகளில் ஈடுபட்டுள்ள அனைவரையும் பாராட்டுகின்றேன். கடந்த கால சுவடுகளைப் பின்பற்றி புதிய பாதைகள் படைக்க எமது கல்லூரிச் சமூகத்தினரை அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

திரு. க. இ. இராசசேகரம்

அதிபர்,

யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

# Dr. Thambippillai Muththukkumarasamy

Dr. Thambippillai Muththukkumarasamy comes from a respectable family in Kaithady. He is an old boy of Kopay Christian College. He had his Primary education in his village Kaithady and continued his studies there up to Grade 11. Then he joined Christian College in H. S. C class in 1968. He was a very bright student and all the teachers had a good opinion about him. His performance, good behavior and good manners impressed them very much. They had a very strong hope about his future. Their expectations fulfilled when he got through his HSC with excellent grades and entered the university. Their dreams came true and their expectations fulfilled fully when he was appointed as a teacher in Trincomalee. He had served in Trincomalee for some years happily. In 1991, Dr. Muthukkumarasamy was appointed as the Principal of Kopay Christian College. As he is an old boy, everybody was delighted and all gave him a very warm welcome. There was an excellent administration under him. The teachers cooperated with him and the students obeyed him. Discipline and order were maintained properly. There were peace and calmness in the school atmosphere, but there wasn't peace in the country. Inspire of the trials and tribulations that prevailed in the Island, the College went on smoothly.

The College produced good results and the students won many prizes in the competitions which were held in the district. But when the situation became worse, Dr. Mutukkumarasamy had to find a safe place for his family. His two children were very small then. Fortunately he got a good school in Colombo. He

took the reins of Bamalapitiya Hindu College and his administration was very excellent. All the students obeyed him under his very strict orders. He was able to control even the unruly boys of Colombo. The Staff gave full support and co orporation. The institution produced very good results in all the curricular activities. Even the Jaffna people were talking about his excellent administration.

Dr. Muthukkumarasamy is a simple and a humble personality. I am very proud to mention here that I had served as an assistant teacher under Dr. Muthukkumarasamy who was an excellent and an eminent principal a good administrator and an erudite personality.

May the Almighty bless him with good health and give him a long life.

*B. S. A. Ariaratnam,*
***Retired Teacher,***
***Christian College, Kopay.***

# ஆளுமை மிக்க ஆசான்

திருமதி கிறேஸ் நவரஞ்சிதமலர் சற்குணசிங்கம் அவர்கள் சின்னப்பா சின்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரி ஆவார். இவர் கோப்பாய் மத்தியினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தமது ஆரம்பக்கல்வியை யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும், மேற் கல்வியை யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து ஆசிரிய பயிற்சியினை (ஆரம்ப பிரிவு) நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பெற்றுக்கொண்டார்.

இவர் ஆசிரிய சேவையினை முதலில் யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும், பின்னர் யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் ஆற்றியுள்ளார்.

இவரை எல்லோரும் அன்பாக கிறேஸ்ரீச்சர் என்று அழைப்பார்கள். எந்த ஒரு கல்விக்கும் அடித்தளமாக அமைவது ஆரம்பக் கல்வியே ஆகும். இவ்விதமான இக் கல்வியைப் புகட்டும் இவ்வாசிரியர் மாணவர் முன்னிலையில் அன்னையின் மறுவடிவமாகவே இருந்து கல்வி புகட்டியுள்ளார். வகுப்பறை முகாமைத்துவமும் ஆளுமையும் கொண்டவர். ஆங்கிலத்தை நன்றாகப் பேசும் திறமை படைத்தவர். பண்பால் உயர்ந்தவர். எந்நேரமும் மலர்ந்த முகத்துடனே காட்சியளிப்பார். கறுப்புநிற மேனி உடையவராயினும் அழகான கவர்ச்சிகரமான தோற்றம் உடையவர். தனக்கெனவே உருவான நடை, உடை, பாவனை உடையவர். மாணவர்களின் குறும்பு நிகழ்வுகளினால் கோபம் அடையும்போது அவரது கறுப்புமுகம் மேலும் கறுத்துவிடும். அவரது கண் விழிப்பார்வை கோபத்தை உணர்த்தும். இதனையே மாணவரை அமைதி அடையச்செய்யும் தந்திரோபாயமாகக் கொண்டவர்.

கல்வி புகட்டலுடன் மாத்திரமல்லாது கவின்கலையையும் மிகச்சிறப்பாக (அபிநயப்பாடல், நடனம், கோலாட்டம்) மாணவர்களுக்கு ஆர்வத்துடனும், மகிழ்ச்சிகரமாகவும் புகுத்துவதில் வல்லமை படைத்தவர். பாடசாலைப் பரிசளிப்பு போன்ற எவ் விழாக்கள் என்றாலும் இவர் பயிற்றுவித்த நிகழ்விற்காகவே காத்திருந்த பலரின் பலத்தகரகோசங்களுடன் நிகழ்வுகள் இடம் பெறுவது வழக்கம். மேலும் பாடசாலை நிகழ்வுகளுக்காக அவரினால் பயிற்றுவிக்கப்பட்ட கோலாட்டம், நடனம், அபிநயப்பாடல்கள் பலவற்றில் நான் மாணவியாக இருந்து பங்கேற்றுள்ளேன். இவர் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தனது ஓய்வுநேரத்தையும் கருத்திற் கொள்ளாது தனது

வீட்டிலும் பயிற்றுவிப்பது வழக்கம். இவரினால் பயிற்றுவிக்கப்பட்ட அபிநயப் பாடல் ஒன்று,

*"கிட்டக்கிட்ட வருவாய் அணில்பிள்ளையே*
*தட்டுத்தட்டுப் பழங்கள் உனக்கல்லவோ"....*

இப்போதும் என் செவிகளுள் ஒலித்தவண்ணமே இருக்கின்றது. இவ்வாறான பாடல்களை திருமதி அ. கனகரத்தினம் ஆசிரியை அவர்கள் ஆக்கம் செய்ய இவர் இசைகொடுத்து அபிநயம் பிடிப்பது வழக்கம்.

மேலும் இவர் தனது சக ஆசிரியர்களுடன் சகோதர உணர்வுடன் பழகும் தன்மையை யான் அவதானித்திருக்கின்றேன். சக ஆசிரியர்களின் கஸ்டநஸ்டத்தில் பங்கேற்பவராகவும் திகழ்ந்தார். அது மட்டுமல்லாது மாணவர்களின் பெற்றோர்களையும் நன்கு அறிந்து வைத்திருப்பதுடன் மாணவர்களின் எதிர்கால முன்னேற்றம் பற்றி (வரவு ஒழுங்கு, ஒழுக்கம், கற்றல் செயற்பாடுகள்) பெற்றோருடன் கலந்துரையாடுவதும் வழக்கம். மாணவர்களுடன் அன்பாகவும் அதேநேரம் கண்டிப்பாகவும் இருப்பார்.

தாம் ஏற்கும் பொறுப்புகள் யாவற்றையும் திறம்பட ஆற்றும் செயற்திறன் மிக்கவர். அவரது காலம் மாணவர்களுக்கு ஒரு பொற் காலமாகவே அமைந்தது. N. P. T. A பரீட்சையில் மாணவர்கள் சித்தி பெறுவதற்கும் அயராது உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர்களின் மனநிலையைப் புரிந்து கற்பிப்பதில் மிகவும் சிறந்து விளங்கியவர். மாணவர்கள் வகுப்பில் தொய்வடையும் போதிலெல்லாம் எழும்பு, இரு, எழும்பு, நில், ஓடு என செயற்பாடுகளில் ஈடுபடுத்தி உற்சாகப்படுத்தி கல்வியின்பால் கவனஈர்ப்பு ஏற்படுத்துவதில் வல்லவர். அவரது அன்றைய காலகட்டத்தில் கூட களப் பயணங்களை ஏற்படுத்தி ஊரில் உள்ள சிறப்பான அம்சங்களை மாணவர்களுக்குக் காட்டி இருக்கின்றார். மேலும் வகுப்பில் மாணவர்கள் மனனம்செய்யும் செயற்பாடுகளை போட்டிகள் வைத்து பரிசாக இனிப்புகள் வழங்கி ஊக்குவித்துள்ளார். இவரது உன்னதமான சேவை பல்வேறு கல்வியாளர்களை உருவாக்கக் காரணமாக இருந்தது. இவ்வாறு இவரது அளப்பரிய சேவைகள் அனைத்தும் போற்றிப் பாராட்டுதற்குரியவையாகும். எனது கற்றல் காலப் பகுதியாகிய *1956* ஆம் ஆண்டு தொடக்கம் *1967* ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இவ் ஆசிரியையின் செயற்பாட்டில் அவதானிக்கப்பட்ட சிலவற்றையே இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

நான் ஆசிரியராகக் கடமையாற்றும் பாடசாலைக்குச் செல்லும் வழியில் தான் இவரது வீடும் அமைந்துள்ளது. நான் அவ்வழியால் செல்லும் போதெல் லாம் அவர் சுறுசுறுப்பாக நின்று தனது வீட்டுக் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. அந்நேரத்தில் எனக்கு அவரது ஆசிரியப்பணிக் காலத்து வேகமான சுறுசுறுப்பான நடையும், உடை பாவனை என்பனவும் என் கண் முன் தோன்றும். அவரது பார்வையாலே அவரது ஆசி பெற்று என் பாடசாலைக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இவர் ஆசிரியப்பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் சிலகாலம் யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் முகாமையாளராகவும் கடமையாற்றி யுள்ளார்.

இவர் வாழ்வு மேலும் சிறப்பாக அமையவும், நோய் நொடியின்றி தொடர்ந்து நீண்டகாலம் வாழ்ந்து தனது குடும்பத்தினருக்கும் சமூகத்திற்கும் தொண்டாற்ற வேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன்.

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் - உய்வு இல்லை*
*செய்ந் நன்றி கொன்ற மகற்கு"*

என்னும் குறளுக்கு இணங்க இக் கட்டுரையை எனது ஆசிரியைக்கு நான் செய்யும் நன்றிக்கடனாகக் கருதி சமர்ப்பிக்கின்றேன். அத்துடன் இத்தரு ணத்தில் எனக்கு ஆரம்பக்கல்வியைப் புகட்டிய செல்வி பரிமளம் ஆசிரியை, திருமதி மு. அன்னபூரணம் ஆசிரியை, திருமதி அ. கனகரத்தினம் ஆசிரியை, ஆரம்பப்பிரிவு பெரிய உபாத்தியாராகக் கடமையாற்றிய திருமதி S. சொலமன் அவர்களையும் நினைவுகூருவதில் பெருமகிழ்ச்சியடைந்து இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

**திருமதி கமலாதேவி பாலச்சந்திரா**<br>
பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்,<br>
பழைய மாணவி.

# என்னைக் கவர்ந்த ஆசான்
# சிவகுருநாதபிள்ளை நம்பியாரூரன்

கோப்பாய் வடக்கின் **"பிராம்பற்றை"** என்ற குறிச்சியில் சிவகுருநாத பிள்ளை சண்முகசுந்தரம் தம்பதிகளின் புதல்வனாக 1936 ஆம் ஆண்டு உதித்த நம்பியாரூரன் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியை இந்தியாவிலும் பயின்றவர்.

இவர் கிறிஸ்தவ கல்லூரியின் பாடசாலைக்கு அருகாமையில் அமைந் திருக்கும் **"அருணையா பிளேஸ் ஒழுங்கையில்"** வசித்த **"அருணையா"** என்பவரின் புதல்வியாகிய **"அருள்மலர்"** என்பவரைத் திருமணம் புரிந்து, புத்திரபாக்கியத்தையும் பெற்றுக்கொண்டவர். இந்திய பல்கலைக்கழகம் ஒன்றிலே கலைமாணி பட்டத்தைப் பெற்றதன் பின் இலங்கையில் ஆசிரிய சேவையில் இணைந்துகொண்டார்.

இவர் கடமையாற்றிய பாடசாலைகளில் கிறிஸ்தவ கல்லூரியும் ஒன்றாகும். 1970களில் இக் கல்லூரியில் தமது சேவையை ஆற்றியவர். 1978 ஆம் ஆண்டு ஆசிரியத் தொழிலை விட்டு நைஜீரியா நாட்டிற்குச் சென்றார். தற்போது தனது குடும்பத்தாருடன் கனடாவில் வசித்து வருகிறார்.

இவர் கிறிஸ்தவ கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் பாட சாலையின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவியவர். சாத்வீகப் பண்புடன் அதிபர், ஆசிரியர், மாணவருடன் பழகுவார். நான் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்று க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி யடைந்த பின் க.பொ.த (உயர்தர) வகுப்பில் கலைப்பிரிவில் கல்வி கற்பதற்காக கிறிஸ்தவ கல்லூரியில் இணைந்துகொண்ட போது புவியியல் பாடத்தை இவர் கற்பித்தார்.

புன்னகை பூத்த முகத்துடன் தனது கற்பித்தலை மேற்கொள்வார். இவ ரிடம் இருந்த ஆங்கில பாட அறிவு காரணமாக ஆங்கில மொழியில்

எழுதப்பட்ட புவியியல் பாடப் புத்தகங்களை அதிகமாக வாசித்து வைத்திருந்தபடியால் மேலதிக அறிவை எமக்கு ஊட்டக் கூடியதாக இருந்தது. எம்முடன் அன்பாகப் பழகி நல்லறிவுரைகளையும் வழங்குவார்.

கற்பிக்கும் போது ஆங்கிலச் சொற்களையும் அதிகம் கையாள்வார். புவியியல் பாடமானது விஞ்ஞானம் சார்ந்த பாடமாக இருந்தபோதும் இவர் ஆங்கில அறிவுடன் தமக்கு இருந்த ஆளுமைப் பண்பையும் இணைத்துக் கொண்டு மேலும் புவியியல் பாடத்தோடு இணைந்த விஞ்ஞான அறிவையும் தனது தேடல் முயற்சி மூலம் பெற்றுக் கொண்டார் என்பதை அவரது கற்பித்தல் மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

சனி, ஞாயிறு நாட்களிலும் மேலதிக வகுப்பு நடத்துவார். க.பொ.த. உயர் தர மாணவர் மன்றத்தின் நிகழ்வுகளில் அவர் பங்கேற்பார். குறிப்பாக மாணவர்கள் பங்குபற்றிய பட்டிமன்றத்துக்கு நடுவராக இவர் செயற்பட்டவர். காலையில் பாடசாலையில் இடம்பெறும் ஆராதனைக் கூட்டத்தின்போது மணிமொழிகள் வழங்குவார். அதில் சிறந்த உதாரணக் கதைகளையும் கூறுவர்.

விளையாட்டுத்துறையில் உள்ள சட்டதிட்டங்கள் பற்றிய அறிவு அவரிடம் காணப்பட்டது. பல்துறையறிவு படைத்த அவர் எமது பாடசாலையை விட்டுச் சென்றது மாணவருக்கும், பாடசாலை நிர்வாகத்துக்கும் பேரிழப்பாக இருந்தது. எனினும் அவர் தனது வாழ்வின் முன்னேற்றத்திற்காக வெளிநாடு செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பிரிவு தவிர்க்க முடியாததாயிற்று.

அர்ப்பணிப்பான அவரது சேவையை நான் என் வாழ்நாலில் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

திரு. கா. திருப்பதி
ஆசிரியர்,
யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

# "நெஞ்சில் அழியா ஓவியமோ"
# பொன்னுத்துரை மாஸ்ரர்

வல்வெட்டியை பிறப்பிடமாகவும், திருநெல்வேலி அம்மன் வீதியை புகுந்த இடமாகவும் கொண்டு வாழ்ந்த அமரர் சின்னத்தம்பி பொன்னுத்துரை ஆசிரியர் (பொன்னுத்துரை மாஸ்ரர்) பாடசாலை தொடர்பாக இன்றும் எமது ஞாபகத்தில் நிலைத்திருக்கிறார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பட்டப்படிப்பை படித்த இவர் இலண்டன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மானிப்பட்டத்தை (B.Sc) பெற்றார்.

இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பு உயர்தர வகுப்புக்களில் விஞ்ஞானம், கணிதம் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறையாக இருந்த காலத்தில் இரசாயனவியல், தூயகணிதம், பிரயோககணிதம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் சிறந்த ஆசானாப் பணியாற்றினார். ஆசிரியப் பணியில் கண்டிப்பும் அர்ப்பணிப்பும் ஒருங்கு சேரப்பெற்றமையால் பொன்னுத்துரை மாஸ்ரர் மாணவர் சமூகத்தில் மிகுந்த மதிப்புடையவராக விளங்கினார்.

முன்கைப்பிடியில் களவுருவான பிரப்பம் கூடை பொருத்திய றலி துவிச்சக்கரவண்டியே இவர் பாடசாலைக்கு வரும் வாகனமாகும். இல்ல ஆசிரியராக இருந்து மாணவர்களுக்கு விளையாட்டிலும் உற்சாகப்படுத்தினார். பாடசாலை வைபவங்களில் கலந்து சிறப்பிக்க ஒருபோதும் தவறமாட்டார். ஆத்மீகத் துறையிலும் ஈடுபாடுமிக்கவர். அழகான தோற்றப் பொலிவுமிக்கவர்.

க.பொ.த உயர்தர வகுப்பில் பிரயோககணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்களை நான் அவரிடம் கற்றேன். கற்பித்தல் முறை தற்கால கற்பித்தல் முறையுடன் ஒப்பிடும் போது வேறுபட்டது. விஞ்ஞான, கணித பாடங்களுக்கான தமிழ்மொழி மூலப் புத்தகங்களும் மிக அரிதாகவே பெறக்கூடியதாக இருந்தது. மொழிபெயர்ப்புச் செய்தே கற்பிக்க வேண்டும். பாடப்பரப்பின் பெரும்பான்மைக்கு குறிப்பு எழுதலும் சிறியளவில் செயல்முறை பயிற்சிகளும் இடம்பெறும்.

பிரத்தியேக வகுப்புக்களும் மிகமிக அரிது. இரசாயனவியல் செயல்முறை பரீட்சைகளுக்கு காய்ச்சி வடித்த நீர் தேவைப்படும். இதற்குப் பதிலாக தானே வீட்டில் மழைநீரை பாதுகாப்பாக சேகரித்து "lab boy" ஆய்வுகூட உதவியாளர் மூலம் பாடசாலைக்கு வழங்கியதை நான் இன்றும் மறக்க மாட்டேன்.

கரும்பலகையில் பாடங்களை விளங்க வைக்கும் போது ஒரு வெண் கட்டி துகள்களையாவது வீணாக வீசாது எழுதி முடிப்பார்.

கற்பித்தலில் கண்டிப்பானவர் என்பதற்கு அவரிடம் கற்றவர்களில் தலையில் குட்டும், பிரம்படியும் வாங்காதவர்கள் இல்லை எனலாம். மோதிரக் கையால் குட்டு வாங்க வேண்டும் என்றும் தனது கையில் பிளாற்றினத்தால் செய்யப்பட்ட மோதிரம் அணியப்பட்டுள்ளதால் மிகவும் பெறுமதியானது எனக் குறிப்பிடுவார். பேச்சு வழக்கில் எல்லோரையும் ஐயா என்றே அழைப்பார்.

தனது குடும்பத்திலும் பிள்ளைச் செல்வங்களை கல்வி கேள்விகளில் வல்லவராக்கிய பெருமை இவரைச் சாரும். சூழலியலாளரான பொ. ஐங்கரநேசன் ஒரு சான்றாவார். பொருளாதார வளர்ச்சியை நோக்கி நைஜீரியாவில் விரிவுரையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்று தனது புகுந்த இடத்தில் பிள்ளைச் செல்வங்களுடன் வாழ்ந்து வந்தார்.

தனக்குத் தெரிந்த மாணவர்களை கண்டால் அவர்களுடன் அன்பாக கதைத்து ஆசி கூறி அனுப்பி வைக்கும் பண்பினர். இன்று எம்முடன் இத்தகைய பெருந்தகை இல்லை. எனினும் எம் மனத்தில் அவர் விதைத்த பண்புரைகளும் அறிவுரைகளும் கல் போல் நிலைத்திருக்கும்.

திரு. ஐ. சிவலோகநாதன்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
கட்டடங்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

# இலங்கையில் இங்கிலாந்தில்

நான் 2011ஆம் ஆண்டு சித்திரை மாதம் இங்கிலாந்துக்குச் செல்லும் ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொண்டேன். அங்கு நான் சென்றவேளை எனக்குக் கல்வி கற்பித்தவர்கள். என்னுடன் கல்வி பயின்றவர்கள், எமது பாடசாலையில் கல்வி கற்றவர்கள், என்னிடம் கல்வி கற்றவர்கள் மற்றும் உறவினர்கள் ஆகியோரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு அவர்கள் எமது பாடசாலையில் பெற்ற கல்வி மூலம் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதைக் கூறு வதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும். எமது நாட்டினை ஏறக்குறைய 150 வருடங்கள் பிரித்தானியர் ஆட்சி செய்தனர். அவர்கள் எமது நாட்டுக்கு வழங்கிய பெரும் செல்வம் கல்வியாகும். இக்கல்வியை வழங்குவதற்காகப் பல இடங்களில் பாடசாலைகளை நிறுவினர்.

கோப்பாய் கிராமத்திலும் ஒரு கல்லூரியை நிறுவினர். இக்கல்லூரி பல கல்விமான்களை உருவாக்கிய பெருமைக்குரியது. எனவே இங்கு கல்வி கற்றவர்கள் இங்கிலாந்திலே எவ்விதம் வாழ்கிறார்கள் என்பதை நோக்குவோம்.

எனக்கு கல்வி கற்பித்தவர்களில் ஒருவர் திரு. கணபதிப்பிள்ளை சிவகுரு நாதபிள்ளை ஆவார். இவர் திரு. திருமதி கணபதிப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வன். அவர் தனது ஆரம்பக் கல்வியை யா/ கல்வியங்காடு இந்துக் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை யா/ இந்துக் கல்லூரியிலும், எமது கல்லூரியிலும் பயின்றார். க. பொ. சாதாரண வகுப்பில் கலைப்பிரிவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றார். இக்காலத்தில் விஞ்ஞானக்கல்வி கற்பதில் நாட்டம் கொண்டு எமது பாடசாலைக்கு வருகை தந்தார். இங்கு அவர் உயிரியல் பிரிவில் உயர்தர வகுப்பினைப் பயின்றார். அக்காலத்தில் செயல்முறைப் பரீட்சையில் மாணவர்கள் சித்தி அடைவது குறைவாகவே காணப்பட்டது.

இதனால் அவர் இங்கு உயர்கல்வியைத் தொடர முடியவில்லை. எமது பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் பீற்றோ இல்லத் தலைவராக, மாணவ முதல்வராக, (Prefect) இந்து மாமன்றத் தலைவராகவும் கடமையாற்றியவர். அவர் சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டு செய்வதில் அக்காலத்திலேயே முன்னின்று உழைத்தவர். அவர் கல்வி கற்ற காலத்தில் யோகர் சுவாமிகளை

எமது பாடசாலைக்கு அழைத்து வந்தார். யோகாசனப் பயிற்சியை எமது பாடசாலையில் அறிமுகம் செய்தார்.

இவர் கல்வி கற்று முடிந்ததும் தனது பொழுதை வீணாக்க விரும்ப வில்லை. எனவே வகுப்புக்கு தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் இடமாற்றலாகிச் சென்றார். அதனால் இவர் எனது வகுப்புக்குச் சிலகாலம் தமிழ்ப் பாடத்தைக் கற்பித் தார். இக்காலத்தில் உயர்கல்வி பெறும் நோக்குடன் இங்கிலாந்து நாட்டிற்குப் பயணமானார். அங்கு அவர் கணனிக் கல்வியைக் கற்றுத் தேறினார்.

இதனால் இலண்டன் தொழில்நுட்பக் கல்லூரியில் கணனிக் கூட உதவி யாளராகக் கடமையாற்றினார். பின்னர் லூசியத்தில் அமைந்த "Gold Smith" கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இவர் இங்கிலாந்திலே தமிழை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டு வருகிறார். இரண்டாவது மொழியாக தமிழர் தமிழைக் கற்பதற்கு முன்னோடியாக முன்னின்று உழைத்தவர். பாடத் திட்டம் தயாரிக்கும் குழுவிலும் அங்கம் வகிக்கிறார். சர்வதேச ரீதியாக தமிழ் பரீட்சையை நடாத்தும் பரீட்சகராகவும் பணியாற்றுகிறார். இவர் தமிழ், சமயம், கணனி போன்ற பகுதிகளை உள்ளடக்கிய 25 இற்கு மேற்பட்ட கட்டுரைகள் பலவற்றை மகாநாடுகளில் சமர்ப்பித்துள்ளார். செம்மொழி மகாநாட்டிலும் பங்கு ஏற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தமிழ் பாடசாலைகளை லூசியத் தில் நடாத்தி வருகிறார். இதனை விட சமூகப் பணிகளிலும் பங்கேற்றுள்ளார். இவர் ஞானபூபதி என்னும் மங்கையை இல்லத்தரசியாக்கிக் கொண்டார். இல்லறத்தை நல்லறமாக்கியதன் விளைவாக மூன்று பெண் பிள்ளைகளுக்கு தந்தையானார். மூன்று பிள்ளைகளும் உயர் கல்வியைப் பெற்று அங்கு கடமையாற்றுகின்றனர்.

திருமதி ஞானபூபதி சிவகுருநாதபிள்ளை அவர்கள் எமது பாடசாலையில் க. பொ. சாதாரண வகுப்பில் கல்வி பயின்றவர். இவர் கல்விகற்ற காலத்தில் பேச்சுப் போட்டிகள், நாடகம் நடித்தல் என்பனவற்றில் பங்கு ஏற்றவர். இவர் எமது பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் ***"மண்டோதரி"*** என்னும் நாடகம் பரிசளிப்பு விழாவுக்காக அரங்கேற்றப்பட்டது. இவர் இந்த நாடகத்தில் இராவ ணனின் மகன் **"இந்திரஜித்து"** என்னும் பாத்திரத்தை ஏற்று நடித்தார். இவர்

கணித பாடத்தில் நாட்டம் கொண்டவர். இதனால் அவரது கல்வி கணிதத் துறையை நாடிச் செல்லலாயிற்று. இவர் இங்கிலாந்து சென்று அங்கு "Dip. in. Accountancy" சோதனையில் சித்தி அடைந்தார். இதனால் அவர் ***"கீறின்விச் மியூசியத்தில்"*** கணக்கு உதவியாளராகக் கடமையாற்றியுள்ளார். கீறின்விச் மியூசியம் உலகப் புகழ் பெற்றது. இத்தகைய ஒரு நிறுவனத்தில் எமது பாடசாலையில் கல்வி கற்ற மாணவி கடமையாற்றினார் என்பது பெருமைக்குரிய விடயமாகும். இவர் தனங்கிளப்பைச் சேர்ந்த செல்வநாயகம் தம்பதிகளின் புதல்வியாவார். இவரும் கணவருடன் இணைந்து தமிழை வளர்ப்பதற்கு முன்னின்று உழைக்கிறார். சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளார். விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்பவர்.

என்னுடன் கல்வி கற்றவரில் ஒருவர் திருமதி பிறிம்றோஸ் குணரட்ணம் அவர். இவர் கிறிஸ்தவ கல்லூரியில் க. பொ. உயர்தரம் வரை கல்வி பயின்றவர். இவர் உயிரியல் துறையில் உயர்தர வகுப்பினைப் பயின்றவர். சிறுவயதில் இருந்தே விளையாட்டு, கல்வி ஆகியவற்றில் சிறந்து விளங்கினார். செல்லையா இல்லத்தலைவியாகவும், மாணவத் தலைவியாகவும் விளங்கினார். இவர் ஒரு பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக எமது பாடசாலையில் பணி புரிந்தவர்.

1987ஆம் ஆண்டு எமது நாட்டு அமைதியின்மையினால் கணவர் வேலை செய்த பாரீன் நாட்டுக்கு தனது பிள்ளைகளுடன் சென்றார். அங்கும் அவர் ஒரு ஆசிரியராகப் பணி புரிந்தார். அவர் கூறிய வாசகம் ஒன்றினை கூறுவது இப்பாடசாலையின் கல்வி பற்றி அறிவதற்கு உதவியாகும். திருவாளர் இராசையா அவர்கள் எமது பாடசாலையில் உயிரியல் ஆசிரியராகப் பணி புரிந்தார். அவர் வகுப்பில் கையாண்ட ஆங்கிலச்சொற்கள் பாரீன் நாட்டில் ஆசிரியத் தொழிலைச் செய்ய உதவியது எனக் கூறினார். இந்த ஆசிரியை தனது புதல்வருக்கு பாரீனில் இருந்து இங்கிலாந்து பரீட்சை எடுப்பதற்கு வழி காட்டினார். பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைக்காக இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு அவரின் திறமையை மதித்த பிரித்தானிய கல்விப் பகுதி அவருக்கு முதியோருக்கு கல்வி கற்பிப்பதற்கான கல்வியைப் பயிலுவதற்கு அனுமதித்தது. இதனால் முதியோருக்கு கல்வியைக் கற்பித்தார். இவர் இலங்கையில் மட்டுமல்ல பாரீன், இங்கிலாந்திலும் ஆசிய நாடுகளிலும் ஆசிரிய ராகப் பணி புரிவதற்கு எமது பாடசாலை வழிகாட்டியது என்பதை

மறுப்பதற்கில்லை. இவர் தான் கல்வி கற்று ஆசிரியராகப் பணி புரிந்ததுடன் நிற்கவில்லை. தமது புதல்வர்கள் இருவரையும் கணக்காளர் ஆக கல்வி பயில வைத்துள்ளார். அவர் இங்கிலாந்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

அடுத்து எமது பாடசாலையில் கல்வி கற்ற இன்னொருவர் செல்வி சுவர்ணலீலா நவரட்ணம் ஆவார். இவர் எமது பாடசாலையில் மாணவத் தலைவராக, இல்ல தலைவியாகப் பணி புரிந்தவர். இவர் தனது திறமையினாலே பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றவர். அங்கு. அவர் கல்விமாணிப் (B. Ed) பட்டத்தைப் பெற்றவர். இப்பட்டம் அவரை சிறிது காலம் ஆசிரியராகவும் பின்னர் கோப்பாய் அளுத்கம ஆசிய ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளில் விரிவுரையாளராகப் பணிபுரிய வைத்தது. தொடர்ந்து கல்வி அமைச்சில் பணிப்பாளராகப் பணி புரிந்தார். புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி, ஆசிரிய நியமனம் வழங்குதல், ஆசிரிய கலாசாலை, ஆசிரிய கல்லூரிகள் ஆகியவற்றில் தமிழ்ப்பகுதிகளுக்குப் பொறுப்பாக இருந்தார்.

அவர் 1992 ஆம் ஆண்டு இங்கிலாந்திற்குப் பயணமானார். அங்கு அவர் ஆரம்பத்தில் ஒரு Estate agent இன் கீழ் கடமையாற்றினார். பின்னர் அதில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு இன்று தானாகவே அவர் ஒரு Estate agent ஆகப் பணிபுரிகிறார். அவர் பலருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளார். மேலும் பல சமூகப் பணிகளையும் ஆற்றியுள்ளார். இங்கிலாந்தில் சைவமக்களின் இறுதிக்கிரியைகள் செய்வதற்கு மடம் ஒன்று அமைத்துக் கொடுத்துள்ளார். அங்கு அவர் சம்பாதித்த பணத்தினைக் கொண்டு கோப்பாயில் "நிவாசம்" என்ற அமைப்பினை பாதிக்கப்பட்ட பெண்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக நிறுவியுள்ளார்.

திரு. குணரட்ணம் அவர்கள் எமது பாடசாலையில் கல்வி பயின்றவர். அவர் அம்பாறை தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்றவர். அவர் தொழில்நுட்ப அதிகாரியாகப் பணி புரிந்தவர். பின்னர் அவர் இங்கிலாந்து சென்றவர். அங்கு அவர் தனியார் நிறுவனம் ஒன்றை அமைத்துள்ளார். அவர் பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளார். இவர் லோகநாயகி என்ற பெண்ணை கரம் பற்றினார். இவரும் எமது பாடசாலையின் பழைய மாணவி

சிறந்த விளையாட்டு வீராங்கனை. அவர் உயர்தர வகுப்பில் உயிரியல் துறையில் பயின்றவர். உயர்தர வகுப்பினை யா / மத்திய கல்லூரியில் பயின்றவர். இவரும் அங்கு தனியார் நிறுவனத்தில் வேலை செய்தவர். இவர்கள் மூன்று பெண்பிள்ளைகளின் பெற்றோராவார். அவர்கள் மூவரும் உயர்கல்வி பயின்று பட்டம் பெற்று வேலை செய்கின்றனர்.

திருமதி சுகந்தி எமது பாடசாலையில் க. பொ. உயர்தரத்தில் கலைப் பிரிவில் கல்வி பயின்றவர். இவரும் அவரது குடும்பத்துடன் இங்கிலாந்து சென்றவர். இவர் நான்கு ஆண்பிள்ளைகளின் தாயாவார். அவர் நான்கு பிள்ளைகளையும் விஞ்ஞானத்துறையில் முதுமாணிப்பட்டம் பெற வைத்துள்ளார். அவருக்கு அவரது சகோதரி லோகநாயகி அங்கு சென்று வாழ்வதற்கு வழிகாட்டினார். ஏனைய சகோதரிகள் அங்கு தமது பிள்ளைகளை கல்வி கற்பிக்கிறார்கள்.

திருமதி சரோஜினிதேவி என்னுடன் எட்டாம் வகுப்பில் கல்வி பயின்றவர். அவர் தமது குடும்பத்தவருடன் இங்கிலாந்து சென்றவர். அங்கு அவர் Dip. in Accountancy பயின்றார். இக்கல்வியின் துணையால் அவர் தனியாகவே நகைக்கடை ஒன்றை நடாத்துகிறார். அவரது கணவர் அவரது நகைக்கடைக்கு மேலே உள்ள கட்டிடத்தில் Audit Firm ஒன்றை நடாத்துகிறார். இரு பெண் பிள்ளைகளின் தாயாவார். அவர் இருவரையும் டாக்டர்களாக கல்வி பயில வைத்துள்ளார்.

திருமதி மங்கையற்கரசி ஸ்ரீகாந்தன் எமது பாடசாலையில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கணிதத்துறையில் கல்வி பயின்றவர். விவசாய நிலையத்தில் கடமையாற்றியவர். இங்கிலாந்துக்கு கணவருடன் சென்றவர். இரு பிள்ளைகளின் தாயாவார். இரு பிள்ளைகளையும் கணனித்துறையில் உயர்கல்வி கற்று பட்டம் பெறவைத்துள்ளார்.

திரு. விஜயகுமார் அவர்கள் எமது பாடசாலையில் வர்த்தகத்துறையில் உயர்தர வகுப்பில் கல்வி பயின்றவர். இவர் அங்கு தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறார்.

திருமதி பயிலச்சி அவர்கள் யா/ பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர். அவரும் இங்கிலாந்து சென்று கணினித்துறையில்

Diploma Course ஒன்றைப் பயின்றார். அவரும் தனியார் நிறுவனத்தில் பணி புரிகிறார். அவர்களது பிள்ளைகளையும் கல்வி பயில வைத்துள்ளனர்.

எமது பாடசாலையில் கல்வி கற்ற மாணவரில் ஒருவர் திரு. மதனரூபன் ஆவார். இவர் எமது பாடசாலையில் மாணவ முதல்வராக செல்லையா இல்தத்தலைவராகவும் பணிபுரிந்தவர். சிறந்த விளையாட்டு வீரர். அவர் உயிரியல்துறையில் கல்வி பயின்றவர். இவர் இங்கிலாந்துக்குச் சென்று எலெக்ரிக்கல் எஞ்ஜினியராகக் கல்வி பயின்று கடமையாற்றுகிறார். இரு பிள்ளைகளின் தந்தையாவார். பிள்ளைகளின் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டவர். மிகுந்த மரியாதையானவர். இங்கு மாணவராக இருந்த காலத்தில் எப்படி ஆசிரியருக்கு மரியாதை வழங்கினாரோ அப்படியே இன்னும் உள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் கூறி வைக்க விரும்புகிறேன். இது அவரிடம் காணப்பட்ட சிறந்த பண்பு ஆகும்.

பாடசாலையில் கல்வி கற்பித்த காலத்தில் கல்வி பயின்றவர்களில் திரு. லிங்ககுமார், திரு. லோகநாதன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். லிங்ககுமார் அவர்கள் உயிரியல்துறையில் உயர்தர வகுப்பில் கல்வி பயின்றவர். மிகுந்த கீழ்படிவான மாணவன் இவர் இங்கிலாந்து சென்று தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறார். இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

திரு. லோகநாதன் அவர்கள் கலைப்பிரிவில் உயர்தர வகுப்பில் கல்வி பயின்றவர். மிகவும் அமைதியான கீழ்ப்படிவான மாணவன். இவரும் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறார். அண்மையில் அவர் இல்லறத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

திரு. காண்டீபன், திரு. முகுந்தன் ஆகியோரும் எமது பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள். காண்டீபன் சிறந்த சாரணர் ஆவார். இவர் உயர்தர வகுப்பில் கலைப்பிரிவில் கல்வி பயின்றவர். சிறந்த படப்பிடிப்பாளர். அங்கு படிப்பிடிப்பாளராகப் பணிபுரிகிறார். இல்லறத்தில் இணைந்த அவர் ஒரு ஆண் பிள்ளையின் தந்தையாவார்.

திரு. முகுந்தன் அவர்கள் *1989* இல் இலங்கிலாந்துக்கு வந்தார். இவர் சாதாரண வகுப்பில் கல்வி பயின்றவர். மிகவும் பண்பான, அன்பான உள்ளம்

கொண்டவர். ஆசிரியருக்கு மிகுந்த மரியாதை கொடுப்பவர். படிப்பில் கெட்டிக் காரன். இல்லறத்தில் இணைந்ததினால் இரு பிள்ளைகளின் தந்தையாவார். தனியார் நிறுவனத்தில் கடமையாற்றுகிறார்.

திருவாளர் விக்னேஸ்வரன் அவர்கள் பாடசாலையில் சாதாரண வகுப்பில் கல்வி பயின்றவர். அவர் ஆரம்பத்தில் சவுதி அரேபியாவில் பணிபுரிந்தவர். பின்னர் இங்கிலாந்துக்கு பயணமானார். இவர் ஒரு Estate agent ஆகப் பணி புரிகிறார். அவர் தனது நிறுவனத்தின் செயற்பாடுகளை எமது தாயகத்திலும் மேற்கொண்டுள்ளார். இவரும் தனது இரு பிள்ளைகளையும் உயர் கல்வி பெற வைத்துள்ளார். கடின உழைப்பாளியாக உள்ளார்.

திருவாளர் பொ. ஜெயக்குமார் அவர்கள் க.பொ.த. உயர்தரத்தில் கணிதத் துறையில் கல்வி பயின்றவர். அவர் இங்கிலாந்து சென்று Net Work Engineer ஆக கல்வி கற்றுள்ளார். அவரும் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறார். இரு பிள்ளைகளின் தந்தையான அவர் அவர்களை உயர் கல்வி பெறவைக்கும் நோக்குடன் கல்வி கற்பிக்கிறார்.

திருமதி சுவர்ணா அவர்கள் எமது பாடசாலையில் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி பயின்றவர். இவர் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றவர். ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாவார். அவர் உயர்கல்வி பெறுவதற்காக (M.Sc) நோர்வே சென்றவர். இன்று அவர் இங்கிலாந்தில் பாடசாலை ஒன்றில் ஆசிரிய உதவியாளராகப் பணி புரிகின்றார்.

திருமதி பவானி, திருமதி றஞ்சி ஆகியோர் உயர்தர வகுப்பில் கல்வி பயின்றவர். திருமதி பவானி கலைப்பிரிவில் கல்வி கற்றவர். திருமதி றஞ்சி உயர்தரத்தில் கணிதப் பிரிவில் கல்வி கற்றவர். இவர்கள் இல்லறத்தில் இணைந்தவர்கள். பிள்ளைகளை வளர்ப்பதனால் வேலைக்குச் செல்லவில்லை. இருவரின் கணவரும் தனியார் நிறுவனத்தை வைத்துள்ளனர். இதனால் அவர்கள் வேலைக்குச் செல்லவில்லை. இங்கு பெற்றோர்கள் தமது பிள்ளை களின் கல்விக்காக அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால் பிள்ளைகள் கல்வி கற்று உயர் நிலைக்கு வருகின்றார்கள்.

நான் இதுவரையில் எமது பாடசாலையில் கல்வி கற்று இங்கிலாந்தில் வசிப்பவர்கள் பற்றி எழுதி உள்ளேன். இவர்கள் இவ்வாறு உயர்ந்த நிலைக்கு

வந்தமைக்குக் காரணம் அவர்கள் பெற்ற கல்வியே காரணம். இலங்கையில் இருந்து இங்கிலாந்திற்கு வந்து கல்வி கற்பதற்கு சாதகமான நிலை காணப் பட்டவர்கள் கல்வி கற்று உயர்ந்த நிலையில் உள்ளனர்.

ஏனையவர்கள் தமது பிள்ளைகளைத்தான் உயர்கல்வி பெற வைத் துள்ளனர். இவர்கள் எல்லாம் இலங்கையில் கல்வி கற்று இருந்தால் சிறுவயதி லேயே உயர்தர பட்டங்களைப் பெற்று இருக்க மாட்டார்கள். அத்துடன் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் தேவையான பணத்தை வழங்கியபடியால் அவர்கள் விரைவில் உயர்கல்வியைப் பெற முடிந்தது. அதனால் வேலையை யும் பெறமுடிந்தது. பெரும்பாலானோர் தாம் கற்ற கல்விக்கு ஏற்ப வேலை யைப் பெற்றுள்ளனர். ஒரு சிலர் கற்ற கல்விக்கு ஏற்ற வேலையைப் பெறமாலும் உள்ளனர்.

பிள்ளைகளின் கல்வியில் மிகுந்த அக்கறையுடனேயே பெற்றோர்கள் இருக்கின்றனர். இன்று கல்வியில் போட்டித்தன்மை புலம்பெயர்ந்தவர்களிடம் காணப்படுகின்றது. சந்தர்ப்பம், பணவசதி, அமைதியான சூழல் என்பன எமது மக்களின் கல்வியின் தரத்தை உயர்த்தி உள்ளது. இதனால் அவர்கள் சமூக பொருளாதார நிலையிலும் உயர்ந்து காணப்படுகின்றனர் என்பது மறுப்பதற் கில்லை. இலங்கையில் கல்வி கற்றால் இவ்வளவு விரைவாக எம்மவர்கள் முன்வந்திருக்க முடியாது.

செல்வி மனோன்மணி கந்தையா

*B. A. Dip. in Ed., M.Phil*

பழைய மாணவி ஓய்வுநிலை ஆசிரியை,

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

# கல்வி ஒளி ஏற்றிய தீபங்கள்

*குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்டு அழகும்*
*மஞ்சள் அழகும் அழகு அல்ல - நெஞ்சத்து*
*நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்*
*கல்வி அழகே அழகு*

என்னும் நாலடியார் பாடலுக்கமைய அழகும். பெருமையுமிக்க கல்வியினை எமக்கு ஊட்டி எம்மை சமூகத்திலே தலைநிமிர்ந்து நிற்க வைத்த ஆசான் களை இக்கட்டுரை மூலம் நினைவு கூருவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

குழந்தையானது பிறந்து, உடம்பு திருப்பி, தவழ்ந்து, தளிர்நடை நடந்து, வீறுநடை நடக்கின்றது. அதுபோல் கல்வியிலும் "அ" எனும் எழுத்தில் ஆரம்பித்து பல நிலைகளைத் தாண்டி அறிவில் தலைநிமிர்ந்து நிற்பதற்குக் காரணமானவர்கள் எம் ஆசான்களே. இத்தகைய கல்விப் பயணத்திலே நான் பல்வேறுபட்ட ஆசான்களைச் சந்தித்தேன். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் எம் நெஞ்சை விட்டகலாதவர்கள்.

எம் வீட்டின் அருகில் உள்ள கிறிஸ்தவ கல்லூரியில் கற்ற காலங்களை எண்ணிப் பார்க்கின்றேன். ஆரம்பக் கல்வியைத் தந்தவர்களில் பரிமளம் ஆசிரியர், திருமதி சொலமன், திருமதி கிறேஸ் சற்குணசிங்கம், அற்புதம் ரீச்சர், அன்னபூரணம் ரீச்சர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பரிமளம் ஆசிரியர் அவர்கள் அக்காலத்திலேயே குருளைச் சிறுவர்களை உருவாக்கி நல்ல முறையில் வழி நடத்தியவர்.

அவர் எப்பொழுதும் மாணவர்களுடன் அன்பாகவே நடந்து கொள்வார். தாய் எப்படி பிள்ளைகளை அரவணைத்து நடப்பாரோ அதேபோன்று தான் அவர் பிள்ளைகளை நடாத்துவார்.

திருமதி சொலமன் ஆசிரியர் ஆரம்பப் பிரிவின் பகுதித் தலைவராகக் கடமையாற்றியவர். கணித பாடத்தை கற்பித்தவர் கண்டிப்பானவர். கடமையை திறம்பட ஆற்றியவர். சமயப் பிரார்த்தனைகளை நடாத்துவார். தற்பொழுது கத்தோலிக்க சமயத்தவர் வழிபடும் இடம் அவரது காரியாலயமாக இருந்தது.

அற்புதம் ஆசிரியர் பாடல்களை இயற்றி வழங்கியதுடன் நின்றுவிட வில்லை. தமிழ்மொழியை ஆரம்ப வகுப்புகளில் நன்றாகவே கற்பிப்பார். இவர் கிறிஸ்தவ சமய பாடத்தையும் கற்பித்தவர். சிறிய உருவம். ஆனால் பெரிய

வேலைகளைச் செய்து முடிப்பார். ""கடுகு சிறிது என்றாலும் காரம் பெரிது" என்பார். அதுபோலவே அற்புதம் ஆசிரியர் அவர்களின் வேலையும் அமையும்.

திருமதி அன்னபூரணம் முருகேசு ஆசிரியர் அவர்கள் கணித பாடத்தை ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தவர், ஆண்டு ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம் கற்பிக்கும் பொழுது அவர் அன்பாகவே கற்பிப்பார். மாணவர்களின் ஊக்கலை அதிகரிக்கும் நோக்குடனும், அவர்களுக்கு உதவும் நோக்குடனும் பென்சில், கொப்பி, போன்ற உபகரணங்களையும், "கேக்" போன்ற உணவுப் பண்டங்களையும் வழங்குவார். தெளிவாகவே கணித பாடத்தைக் கற்பிப்பார்.

மேற்கூறிய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் அரிய பணியினால் எமது பாட சாலையில் ஆரம்பக்கல்வி சிறப்புற வழங்கப்பட்டது. இதனால் பல மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் திறம்பட சித்தி அடைந்தனர். இதனால் கனிஷ்ட பிரிவில் இடைநிலைப் பிரிவில் மாணவர் தொகை அதிகமாகக் காணப்பட்டது.

கல்விப் பொதுத் தராதர, உயர்தர வகுப்புகளில் பாடரீதியாகப் பல ஆசிரியர் களிடம் கல்வி பெறும் பாக்கியம் கிடைத்தது.

முதலில் எமது ஊரின் வடபகுதியில் வசித்த பண்டிதர் கந்தையா அவர் களை நினைத்தால் அவர் கற்பிக்கும் பாணி என் கண் முன்னே எப்பொழுதும் வரும் தமிழ், சமயம் ஆகிய பாடங்களை அவரிடம் பயின்றேன். அவர் சாதாரண உயரமும், கரிய நிறமும் உடையவர். அவர் தமிழ் தேசிய உடை அணிவர் பாட விடயங்களுக்கேற்ப தொனி, முகபாவங்களை மாற்றி நாடக பாணியில் விளக்கம் தரும் அழகு பாடத்தை எம் மனதில் நிலை நிறுத்தி விடும் பாடசாலைகளில் நடைபெறும் தமிழ், சமய விழாக்கள், போட்டிகளில் முன் நின்று பாடுபடுபவர்.

உயிரியல், இரசாயனம் ஆகிய பாடங்களைத் திரு. திருமதி R. இராசையா அவர்கள் கற்பித்தார்கள். அவர்கள் நேரந்தவறாதவர்கள். தமது சொந்தக் காரிலேயே தெல்லிப்பழையில் இருந்து வருவார்கள் அவர்கள் இருவரின் தோற்றமும் பார்வைக்குக் கண்டிப்பானவர்கள் போலத் தோன்றும். ஆனால் பழகுவதற்கு இனிமையானவர்கள். கற்பித்தலிலேயே கண்ணாக இருப்பார்கள். செயல்முறைகள் மூலம் வேண்டிய விளக்கங்கள் அளித்து பாடங்களைத் தெளிவுபடுத்து வார்கள். திரு. இராசையா அவர்கள் கற்பித்தலில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களை ஊக்குவித்தவர்.

ஹொக்கி, கோலூன்றிப் பாய்தல் போன்ற விளையாட்டுக்களைத் திறமையாகப் பயிற்றுவித்தார். எங்கள் பாடசாலை இன்றும் ஹொக்கியில் சிறந்து விளங்குவதற்குக் காரணகர்த்தா இவரே ஆவார். திருமதி இராசையை அவர்களும் இல்ல ஆசிரியையாக இருந்து மாணவர்களை விளையாட்டுக்களில் ஊக்குவித்தார்.

உயர்தர வகுப்பில் கணிதம், பௌதிகம், இரசாயனம் ஆகிய பாடங்களை திரு. P. கந்தையா அவர்களும், திரு. பொன்னுத்துரை அவர்களும் கற்பித்தார்கள், திரு. P. கந்தையா ஆசிரியர் அவர்களும் தேசிய உடை அணிந்தே பாடசாலைக்கு வருவார். பௌதிக பாடம் தொடர்பான மின்சுற்று இணைப்புகளை பொருத்தும் முறைகளை விளக்கி எம்மைத் தொழிற்பட விடுவார்.

இரசாயன பாடத்தைக் கற்பித்த பொன்னுத்துரை ஆசிரியர் அவர்கள் செயல்முறை மூலம் விடயங்களை விளக்குவார். ஆய்வுகூடத்தில் இரசாயனப் பரிசோதனைகளை நாங்கள் செய்யும் போது மிக அவதானத்துடன் கண்காணிப்பார். அவர் அடிக்கடி கூறும் ஒரு வாக்கியம் அதாவது ஓடி ஓடிப் பொறுக்கினாலும் ஒரு கடகம் பாகற்காய்தான். அரைந்து அரைந்து பொறுக்கினாலும் ஒரு கடகம் பாகற்காய்தான் என்பதாகும். தனியார் கல்வி நிறுவங்களுக்கு ஓடி ஓடிக் கற்கச் செல்பவர்களுக்கே இது பொருந்தும் எவ்வழியில் பொறுக்கினாலும் கடகம் ஓர் அளவை மட்டுமே கொள்ளும். அவ்வாறு ஒவ்வொரு மாணவரும் கொள்ளக்கூடிய அளவையே அறிவைப் பெறுவர் என்பதாகும்.

இவர்களை விட திருமதி செல்லையா, திருமதி ரட்ணாதிக்கம், திருமதி வில்லியம், திரு. வோட்ச்வேத் போன்ற ஆங்கில அறிவை ஊட்டிய ஆசான்களும், இங்கு குறிப்பிடத் தவறிய ஏனைய ஆசான்களும் எனது கல்விப் பயிரை வளர்த்தவர்களே ஆவர்.

கல்வி என்னும் ஏணிப்படிகளில் நாம் ஏறி உயர எம்மை வழிகாட்டிய எங்கள் ஆசான்களை நாம் என்றும் மறவோம். அத்தகைய பெருமைமிக்க ஆசிரியப் பணியே எனக்கும் கிடைத்ததையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

*திருமதி நாகேஸ்வரி சிவநாதன்*
ஆசிரியை

# நெஞ்சில் நிறைந்த ஆசான்

நான் கல்வி கற்கும்போது ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 8 வரை கணிதம், எண் கணித ஆசிரியராக திரு. நைல்ஸ் அவர்கள் எனக்கு கற்பித்தார். அவர் கற்பிக்கும் போது எனது சகமாணவர்களையும் அன்பாகவே கற்பிப்பார். மாணவர்களுக்கு கற்பிக்கும் பொழுது களைத்துப் போய் இருந்தால் அந்தக் களைப்பைப் போக்குவதற்கு சிறு கதைகள் சொல்லி எங்களை மகிழ்விப்பார்.

கணித பாடத்தை செய்யும் போது அதிக நேரம் எடுத்தால் உடனே அக் கணித பாடத்தை சுருக்கமாகச் செய்து முடிப்பதற்கான வழிகளைச் சொல்லித் தருவார். கணிதம் செய்ய எடுக்கும் நேரம் நீண்ட வழிகள் எடுக்காமல் நேரடியாக எடுக்கலாம் என்று நேரடி வழிகாட்டி செய்துகாட்டி எங்களை எல்லாம் வியப்பில் ஆழ்த்துவார்.

சில கணித ஆசிரியர்கள் கணித பாட புத்தகத்தை எழுதும் பொழுது இவரிடம் காட்டி ஆலோசனை பெறுவார்கள். அவரை **"கணித விற்பன்னர்"** என்று கூறலாம். சிலர் சிரிப்பதற்கு பகிடி விடுவார்கள். சிலர் சிந்திப்பதற்காக பகிடி விடுவார்கள். உலகப் புகழ் பெற்ற **"பேனாட் சோ"** போன்று சிரிப்பதற்கும் சிந்திப்பதற்குமாக இவர் பகிடிகள் அடிக்கடி விடுவார்.

கடமைக்கோ, கண்ணியத்துக்கோ குறைவானவர் அல்லர். தடியோ பிரம்போ வகுப்பறைக்கு கொண்டு சென்றதை நான் அறியேன். இது தற் காலத்து படிப்பு முறை என்று சொல்லலாம். அதையும் நுணுக்கமாக ஆராயும் திறன் கொண்டவர். எமது கோப்பாய் பிரதேசத்தில் பல தொழில் புரிபவர்கள் உண்டு. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களும் உண்டு. அவர்களின் நிலமையை உணர்ந்து கணித பாடத்து கல்வியை இலவசமாக ஊட்டி மாணவர்களினதும் ஊர் மக்களினதும் நன் மதிப்பைப் பெற்றவர் ஆவார்.

இதேபோல் கந்தையா ஆசிரியரும் கல்வி ஊட்டுவதற்கு சிறந்து விளங்கி னார். இவர் விவசாயியின் மகன். மாணவர்களின் நிலமையை உணர்ந்து அவர் கல்லூரியிலும் சரி, வீட்டிலும் சரி தனது மாணவர்களுக்கு கணித

பாடத்தையும், பௌதிக பாடத்தையும் கல்வி பொது சாதாரண வகுப்புக்கு கல்வி ஊட்டினார். அப்பொழுது அவரிடம் கற்கும் மாணவர்கள் அதிகம் பேர் சித்தி அடைந்துள்ளார்கள். அதோடு மட்டுமல்லாமல் A/L உயர்தரத்து மாணவர்களுக்கு இப்பாடத்தை ஊட்டி இன்று பொறியியலாளர்கள், வைத்தி யர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்களும், ஆசிரியர் களாகவும் இந்த நாட்டில் கடமை புரிகின்றார்கள்.

எனக்கு கல்வி போதித்த இப்படிப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் நினைவுபடுத்துவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொ. கதிர்காமநாதன்
ஓய்வுபெற்ற பகுதித் தலைவர்,
தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## பாடசாலை வளங்கள்

இயற்கை வளம் பொருந்திய சூழலில் எமது பாடசாலையான கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அமைந்துள்ளது. எமது கல்லூரியானது கோப்பாய் மாண வர்களை மட்டுமன்றி அயலூரில் இருந்து வரும் மாணவர்களையும் கல்வி பயில வைத்துள்ளது. எமது பாடசாலையில் காணப்படும் வளங்களை இரண் டாகப் பிரிக்கலாம். ஒன்று பௌதிக வளம், மற்றையது மனித வளம் என இரு பிரிவுகளாக நோக்கலாம்.

முதலில் பௌதிக வளத்தை எடுத்து நோக்குவோம். எமது பாடசாலையில் ஒரு பிரதான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இது 125 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி அமைக்கப்பட்டது. முக்கியமான கூட்டங்கள், விழாக்கள் என்பன இங்கு நடைபெறுகின்றது. இக் கட்டிடமும் பூரணமான வசதிகளைக் கொண்டவை அல்ல.

இதனை விட சண்முகநாதன், செல்லையா, இராசசேகரம், சிவநேசன், இராசரட்ணம் ஆகிய மண்டபங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கணனி ஆய்வுகூடம் ஏறக்குறைய 35 மாணவர்கள் கல்வி பயிலக்கூடியதாக உள்ளது. விஞ்ஞானகூடத்தில் நீர் பெறக்கூடிய வசதி போதுமாக இல்லை. உபகரணங் களும் போதியளவு இல்லை.

இதனைவிட விவசாயம், விளையாட்டு ஆகிய துறைகளில் பொருட்களை வைப்பதற்கு தனியாக அறை இல்லை. ஆசிரியர்களுக்கு தங்குவதற்கு ஆசிரியர் அறை ஒழுங்கானதாக இல்லை. தண்ணீர் வசதி கொடுப்பதற்கு அண்மைக் காலத்தில் நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பாடசாலை சுற்றி மதில் அமைக்கப்படவில்லை. இதனால் ஆடு, மாடு, மனிதர் களால் பாடசாலைக்கு பாதுகாப்பு இல்லை. இதனால் பாடசாலை முற்றத்தை அழகுபடுத்த முடியவில்லை.

விஞ்ஞான ஆய்வுகூடத்திற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டால் தான் விஞ்ஞானக்கல்வி வளர்ந்து வளர்ச்சி அடையும் என்பது கண்கூடு. நூலக வசதியும் திருப்தியாக இல்லை என்றே கூறவேண்டும். ஒரே நேரத்தில் 30 மாணவர்கள் தான் தங்கி இருந்து கற்க முடியும். நூலகம் விஸ்தரிக்கப்பட

வேண்டும். விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவும் விஸ்தரிக்கப்பட வேண்டி உள்ளது.

அடுத்ததாக மனித வளத்தை எடுத்து நோக்குவோம். எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் பட்டதாரிகள் ஆகவும் பயிற்சி பெற்றவர்களாகவும், கற்பிப்பதில் திறமை மிக்கவர்களாகவும் மாணவர்களை நல்வழிப் படுத்தியும் ஊக்கப்படுத்தியும் சிறந்த ஒரு பிரஜையாக மாற்றுவதில் முன்னின்று செயற்படுகின்றனர். எமது பாடசாலையில் பல்கலைக்கழக அனுமதியிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் சாதனை படைத்து வருகின்றனர். இதற்குச் சான்றாக "**பிரதீபா பிரபா**" விருந்தையும் ஆக்கத்திறன் போட்டி விருதையும் 2 ஆசிரியர்கள் பெற்றுள்ளனர்.

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 538 மாணவர்களும், தரம் 12, 13 இல் 305 மாணவர்களுமாக மொத்தம் 843 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆசிரியர் ஆளணியின் எண்ணிக்கை 48 ஆகும். இவர்களில் 29 ஆசிரியர்கள் தொழில் தகைமை கொண்ட பட்டதாரிகள் ஆவார். ஆசிரியர்கள் வினைத்திறன் மிக்கதும் வினைத்திறன் கொண்டதுமான சமூகத்தை உருவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர். இதன் பெறுபேறாக (2011 ஆம் ஆண்டில்) மெய்வல்லுநர் போட்டியில் மாவட்டமட்டம், மாகாணமட்டம் என்பவற்றில் மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். இதிலே சுமன் பதக்கத்தை பெற்றதும் குறிப்பிடத்தக்கது. வலைப்பந்தாட்ட போட்டியிலும் மற்றும் உதைப்பந்தாட்டப் போட்டியிலும் கோட்ட வலய மட்ட விருதினைப் பெற்றுள்ளனர்.

மாணவர் மன்றம், தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், கணித, விஞ்ஞான மன்றம், கவின்கலை மன்றம், விளையாட்டுக்கழகம் போன்றவை மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரும் முறையில் இயங்குகின்றன.

தமிழ் மன்றத்தின் ஆளுமையினால் குயிலரசி என்ற மாணவியால் எழுதப்பட்ட கவிதைகள் கவிதைத் தொகுதியாக வெளியிடப்பட்டுள்ளது. இம் மன்றங்களின் ஊடாக மாணவர்கள் சமூக சேவைகளை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது. இந்துமாமன்றம், கிறிஸ்தவ மன்றங்கள் மாணவர்களிடையே சமய

அறிவையும் விழிப்புணர்வையும் வளர்ப்பதற்கு ஏதுவாக உள்ளன. கணித, விஞ்ஞான தொழில்நுட்ப மன்றங்களினால் மாணவர்களின் தனித்திறமைகள் வளர்க்கப்படுகின்றன.

கணனி மென்பொருள் போட்டி, தேசிய தகவல் தொழில் விருது வழங்கும் விழாவில் பங்குபற்றி மாகாண மட்டத்தில் A பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக 20 இலட்சம் பெறுமதியான கணனிகள் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. பழைய மாணவர் சங்கம் இப் பாடசாலையின் அனைத்து செயற்பாடுகளிலும் பங்குபற்றி நிதி உதவிகளையும் பாடசாலையின் முன்னேற்றத்திற்காக ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றமை மாணவர்களை திறமை மிக்கவர்களாகவும் நன்மாணவர்களாகவும் எதிர்கால சிற்பிகளாகவும் வெளியேற உதவுகின்றது.

செல்வி க. பவிதா
தரம் - 9

# எமது ஊரில் வாழ்ந்த தமிழ்ப் பெரியார்

*"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்*
*நற்றவ வானிலும் நனிசிறந் தனவே"*

எனும் ஆன்றோர் வாக்கிற்கமைய தான் பிறந்த தாய் மண்ணின் தமிழும் சைவமும் தழைத்தோங்க தொண்டாற்றிய பெரியார் வடகோவை வித்துவான் சபாபதி நாவலர் அவர்களாவார்.

**"தோன்றிற் புகழோடு தோன்றுக..."**

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க கோவையம்பதியிலே வாழ்ந்த சைவப் பெருமக்களாம் சுயம்புநாதப் பிள்ளையவர்களுக்கும் தெய்வயானை அவர் களுக்கும் மகனாக 1848 ஆம் ஆண்டு சபாபதி நாவலர் அவர்கள் பிறந்தார்.

19 ஆம் நூற்றாண்டு காலத்தில் சைவத்திற்கும் தமிழிற்கும் வந்த பேரா பத்துக்களை தமது அறிவாற்றலாலும், மதிநுட்பத்தாலும் எதிர்த்துப் போராடி வெற்றி கண்ட ஆறுமுகநாவலர் வழியிலே எமது ஊராம் கோவையம் பதியில் தோன்றி வாழ்ந்த பெரியார்களில் முதன்மையானவர் சபாபதி நாவலர் எனலாம்.

சபாபதி நாவலர் அவர்கள் தன் ஆரம்பக் கல்வியை ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் அவர்களிடம் முறையாகக் கற்று தமிழில் பாண்டித்தியம் பெற்றார். பண்டிதர் அவர்களது நன்மாணாக்கனாகவும் சிறந்து விளங்கினார்.

மொழிப் பாண்டித்தியம் என்பவற்றை கண்ட ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களின் வேண்டுகோள்படி சிதம்பரத்தில் சைவப் பிரகாச வித்தியாசாலையின் தலைமைத் தமிழ் போதனாசிரியராகக் கடமையாற்றினார். இக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தில் சேர்ந்து முறையாக ஞானநூல்களைக் கற்று அவ் ஆதீனத்தின் வித்துவானாகவும் விளங்கினார்.

இக்காலத்திலே அவர் தேசத்தின் மீதும், தமிழ் மீதும், சைவத்தின் மீதும் கொண்ட பற்றுதலினால் தான் சென்ற இடமெல்லாம் பெரும் சொற்பொழிவுகள் பிரசங்கங்கள் செய்து சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பெரும்பணியில் ஈடுபட்டார். இதன் பொருட்டு ஞானசம்பந்த தேசிக சுவாமிகளால் மகா வித்துவான் பட்டமும் சுப்பிரமணிய யோகீந்தரர் அவர்களால் நாவலர் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஆறுமுகநாவலர் பெருமானுக்கு பின்னர் திருவாவடுதுறை ஆதீனத்தால் நாவலர் பட்டம் பெற்ற பெருமை எமது ஊர் தமிழ்ப் பெரியாரையே சாரும். மேலும் சைவசூளாமணி, நாவலரேறு முதலிய விருதுகளையும் பெற்றார்.

எங்கள் தமிழ்ப் பெரியார் சிதம்பரநாத புராணம், வடகோவைச் செல்வ விநாயகர் இரட்டை மணிமாலை, திராவிடப் பிரகாசிகை, சுழிபுரம் பறாளை விநாயகர் பள்ளுப் பிரபந்தம், யேசுமதசங்கற்ப நிராகரணம் போன்ற 20 இற்கு மேற்பட்ட நூல்களை இயற்றி தமிழிற்கு அளித்துள்ளார். இவற்றுள் திராவிடப் பிரகாசிகை எனும் நூல் பண்டித பரீட்சைக்கு பாடநூலாகக் காணப்படுகிறது.

இவர் சுழிபுரம் சரவணமுத்து தம்பதிகளின் மகளை மணந்து இல்லறத்தில் இணைந்தார். மீண்டும் தமிழ்நாடு சென்று தமிழை வளர்க்கும் பணியில் தன்னை ஈடுபடுத்தினார். 1891 இல் சிதம்பரத்தில் சித்தாந்த வித்தியாநுபாலன இயந்திரசாலையை நிறுவினார். இதன்மூலம் ஞானாமிர்தம், சுதேசவர்த்தமானி எனும் மாதாந்தப் பத்திரிகைகளை வெளியிட்டும் தமிழ்ப்பணி செய்தார்.

இவ்வாறு தன் வாழ்நாளில் தமிழையும் சைவத்தினையும் வளர்க்கும் பணியில் ஈடுபடுத்திய மகாவித்துவான் வடகோவையம்பதி சபாபதி நாவலர் அவர்கள் சிதம்பரத்தில் தங்கியிருந்த காலத்தில் தனது 55 ஆவது அகவையில் 1903ஆம் ஆண்டு ஆனி மாதம் அபரபக்க பஞ்சமிதிதி அவிட்ட நட்சத்திர தினத்தில் சிவானந்தப் பெருவாழ்வு எய்தினார்.

இவரது பெருமைகளை இவரது மாணாக்கர்களின் பாடலடிகளின் மூலம் அறிய முடிகிறது.

*"பக்தியின் மிக்கவர் வாழும்*
*வடகோவை திடமுற வந்து*
*வடகோவைப் போல் வயங்கிய சபாபதி"*

என சுவாமிநாதபண்டிதர் போற்றியுள்ளார்.

மேலும் இவரிடம் கல்வி கற்ற மாணாக்கர்கள் பலர் அவர் வழியிலே பேரறிஞர்களாக விளங்கி தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் பணியில் ஈடுபட்டனர். இவர்களுள் மாதகல் கார்த்திகேசபிள்ளை, பண்டிதர் வதிரி சி. வை. தாமோதரம்பிள்ளை, மாவ்வ கே. விசுவநாதபிள்ளை முதலியோர் எமது யாழ்ப்பாண பேரறிஞர்கள்.

எமது தமிழ்ப் பெரியார் ஞாபகமாக வடகோவைப்பதியிலே சபாபதி நாவலர் சனசமூக நிலையம், சபாபதி நாவலர் வாசிகசாலை (வராம்பத்தை) போன்றன. நிறுவப்பட்டுள்ளன. அவர் சிவபதம் அடைந்த ஆனி மாதம் 5/6 ஆம் திகதிகளில் நினைவு விழா எடுக்கப்படுகிறது.

**செல்வி பு. சங்கமிதா**
தரம் – 6

# எமது பாடசாலை

160 ஆவது வருடத்தின் புதிய சகாப்தத்தில் தடம்பதிக்கும் யாழ் / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியானது பிரித்தானிய ஆங்கிலேயர்களால் கி.பி. 1852 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்ப கால கட்டத்தில் தேவாலயத் துடன் இணைந்த சூழலில் கிறிஸ்தவ மதத்தை போதிக்கும் மிஷனரி பாடசாலையாகக் காணப்பட்டது.

ஒழுக்கம் மிக்க பிரஜைகள் வாழும் கோப்பாய் மண்ணில் பசுமை கொஞ்சும் வயற்சூழல், தேவாலயம் என்பவற்றிற்கு மத்தியில் பருத்தித்துறை பிரதான வீதிக்கு அருகாமையில் எமது கல்லூரி அமைந்துள்ளது.

**"உண்மைக்கும் நேர்மைக்கும்"** என்ற மகுட வாக்கியத்தினை சுமந்து கோப்பாய் மண்ணின் மைந்தர்களை ஒழுக்கமுள்ள பிரஜைகளாகவும், சிறந்த கல்விமான்களாகவும் உருவாக்கி சமுதாய முன்னேற்றத்தில் பெரும் பணியாற்றி வருகிறது.

அறிவுசார் நவீன உலகின் மைகல்லாக திகழ்வது கல்வியாகும். அந்த வகையில் ஓர் தமிழ் மண்ணின் கலாசாரம், ஒழுக்க விழுமியங்களுடன் உளவிருத்தியையும், ஆக்கத்திறனையும் மாணவர்களிடையே வளர்த்து வள மான எதிர்காலத்தை உருவாக்குவதில் எமது கல்லூரியும் பெரும் பணியாற்றி வருகின்றது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது ஆரம்பநிலை, இடைநிலைகளை கற்பிக்கும், ஆண், பெண் இருபாலாரும் ஆங்கிலமொழி மூல கற்கைநெறியில் கற்கும் கல்லூரியாகக் காணப்பட்டது.

பாடசாலையின் அபிவிருத்திப் பாதையில் தமிழ்மொழி மூல கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டு, இடைநிலை, உயர்நிலைகளை மட்டும் கொண்ட கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பெரும்பாலான மாணவர்கள் கற்கும் பிரபல கல்லூரியாக தரமுயர்ந்தது.

ஆரம்ப காலங்களிலேயே விஞ்ஞான ஆய்வுகூடம், மனனப்பொருளியல் ஆய்வுகூடம், அழகியற் பாடநெறிகளுக்கான பிரத்தியேக வகுப்பறைகள்,

விளையாட்டு மைதானம், நூல் நிலையம் என்பவற்றைக் கொண்ட கல்லூரி யாகக் காணப்பட்டது.

பின்பு குடிநீர் வசதிக்கான நீர்தாங்கிகள் பொருத்தப்பட்டு குழாய் மூலமான நீர் விநியோகம் செய்யப்பட்டு மாணவர்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப் பட்டது. அத்துடன் ஹட்சின்ஸ் மண்டபம், நவரட்ணராஜா மண்டபம் என்பன வும் மாணவர்களது ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் பிரதான மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு கல்லூரி மேலும் வளர்ச்சியடைந்தது.

20 ஆம் நூற்றாண்டில் குறிப்பாக 2010 ஆம், 2011 ஆம் ஆண்டுகளில் எமது கல்லூரியானது அதிபர் திரு. க. இ. இராஜசேகரம் அவர்களின் நிர்வாகத் தின் கீழ் பல சாதனைகளை செய்து வருகின்றது.

தேசிய தகவல் தொழில்நுட்ப விருது வழங்கும் விழா - 2009 இல் (National ICT. Exellence Award - 2009) எமது கல்லூரி மாகாண மட்டத்தில் A பிரிவில் முதலாம் இடம்பெற்றமைக்காக 20 இலட்சம் பெறுமதி யான கணினித்தொகுதிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் வடமாகாணத்தின் 120 பாடசாலைகளில் முதற் தடவையாக அபிவிருத்தி செய்யப்படும் 40 பாடசாலை களில் ஒன்றாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை பாடசாலை வளர்ச்சியின் இன்னொரு படிக்கல் ஆகும்.

2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரத்தில் முதற் தடவையாக தகவல் தொழில்நுட்ப பாடத்தில் 90% மாணவர்கள் சித்தியடைந் துள்ளனர். க. பொ. த. உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் இருந்து 6 மாண வர்களும், கலைப்பிரிவில் இருந்து 3 மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதி யைப் பெற்றுள்ளதுடன், ஏனைய 3 மாணவர்கள் கல்வியியற் கல்லூரி அனுமதியைப் பெற்றமை கல்லூரியின் கல்வித்துறை ரீதியான வளர்ச்சியைக் காட்டுகிறது.

இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் எமது கல்லூரி மாணவர்கள் அரிய சாதனைகளை நிகழ்த்தி வருகின்றனர். கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி வைரவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில்

எமது கல்லூரி மாணவன் செல்வன் நடேசு ஜெயவானுஜன் தேசியமட்டத்தில் 1 ஆம் இடத்தையும், செல்வி சாருண்யா செல்வராசா 3 ஆம் இடத்தினையும் பெற்று கல்லூரியின் பெருமையை தேசிய மட்டத்திற்கு கொண்டு சென்று உள்ளனர்.

விளையாட்டுத்துறையில் 19 வயது பெண்கள் கரப்பந்தாட்ட அணி யாழ் மாவட்ட ரீதியில் 1 ஆம் இடத்தினைப் பெற்று மாகாண மட்டத்திலும் பங்கு பற்றியுள்ளனர். கல்லூரி மாணவர் ந. சுமன் 13 வயது பிரிவில் 100 மீற்றர், 200m ஓட்டத்தில் மாவட்ட மட்டம், மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று சிறந்த சுவட்டு வீரர் விருதினையும், 3 தங்கப்பதக்கங்களையும் எமது கல்லூரிக்கு பெற்றுத் தந்துள்ளார்.

எமது கல்லூரியில் பழைய மாணவர் சங்கம், உயர்தர மன்றம், பாட ரீதியான மன்றங்கள் கல்லூரியில் விழாக்களை நடத்தி மாணவர்களது ஆற்றலை வெளிக்கொணரும் செயற்பாடுகளையும், சமூக சேவை, கல்லூரியின் அபிவிருத்தி என்பவற்றிற்கும் தூணாக நின்று உறுதியளிக்கின்றது.

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இத்தகைய வளர்ச்சியுடன் மட்டும் நின்றுவிடாது, வட மாகாணத்தின் சிறந்த கல்லூரியாக பிரகாசிப்பதற்கு பாட சாலை சமூகமும், புலம்பெயர் பழைய மாணவர்களும் தங்கள் பங்களிப்பினை செய்து ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

*"தாம்இன் புறுவது உலகு இன் புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந்தார்"*

**செல்வி க. சேவிதா**
தரம் - 13 (2012)

# கல்லூரிக் கீதம்

இராகம்: ஹம்சத்வனி

வாழிய நம் கலைக் கூடமே வாழ்க
வாழிய வாழிய வாழியவே
கழனிகள் சூழ்ந்திடு கோவையம் பதியில்
விளங்கு நற் கிறீஸ்தவ கல்லூரி
உண்மையும் நேர்மையும் உவந்திட அளிக்கும்
உன்புகழ் என்றென்றும் வாழியவே. (வாழிய)

பல்புகழ் மலிந்திடும் பல பெரியோர்களைப்
படைத்து நற்பணி புரிந்தாய்
அவர் மிகு சேவையை ஏத்திட நன்னிலை
அடைந்த நல்நா டெமதே (வாழிய)

மனதினிலுன்றிறம் மதிப்பொடு நிலைத்திட
மகிழ்வோடு நாம் முயல்வோம்
கலை பல கவினுறக் கனிந்திட நல்வழி
காட்டிடு வாய் தாயே (வாழிய)

நிலமிசை நின்புகழ் நீடு வாழ்க
நின்பணி தொடர்ந்து என்றும் வாழ்க
நிலைபெறு கலைகளின் நிறைகுடமாக
நீ யென்றும் வாழிய வாழியவே (வாழிய)

# நன்றி நவிலல்



இச்சுவடு சஞ்சிகைக்கு ஆக்கங்கள் தந்து உதவியவர்களுக்கும், அச்சுப்பதித்து வழங்கிய பாரதி பதிப்பகத்தினருக்கும், அமரத்துவ அதிபர் தின நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்த அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகிகள்,

பழைய மாணவர் சங்கம்,

யா /கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

பாரதி பதிப்பகம், 430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.